www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி　　　　உயிரியியல்　　　　மதிப்பெண்கள் : 70

உயிரியல் - தாவரவியல்　　　　மதிப்பெண்கள்:- 35

### பகுதி - அ

குறிப்பு:- i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.　　　　8×1=8

1) பெரும்பாலான தாவரங்களில் மகரந்தத்துகள் வெளியேறும் நிலை
அ) 1 செல்நிலை　ஆ) 2 செல்நிலை　இ) 3 செல்நிலை　ஈ) 4 செல்நிலை

2) மெண்டலின் காலத்தில் எந்தச் சோதனையில் F சந்ததியின் இரு பெற்றோரின் பண்புகளையும் வெளிபடுத்தும்?
அ) முழுமைபெறா ஓங்குத்தன்மை　ஆ) ஓங்கு வழி
இ) ஒரு மரபணுவின் பாரம்பரியம்　ஈ) இணை ஓங்குத்தன்மை

3) சுற்றுச்சூழலில் மாசுபாட்டினை குறிப்பிடுகின்ற மிக பொருத்தமான சுட்டிக்காட்டிகள் எது?
அ) பாசி　ஆ) பூஞ்சை　இ) லைக்கன்கள்　ஈ) ஊசியிலைக் காடுகள்

4) கீழ்க்கண்ட எந்தத் தாவரத்தில் மெழுகு பூச்சுடன் கூடிய தடித்த தோல்போன்ற இலைகள் காணப்படுகின்றன.
அ) பிரையோஃபில்லம்　ஆ) ரஸ்கஸ்　இ) நீரியம்　ஈ) கலோட்ரோபஸ்

5) ஒரு தாங்கிக் கடத்தியில் உயிரி எதிர்ப்பொருள் மரபணு எதனை தேர்ந்தெடுக்க உதவுகிறது
அ) போட்டி செல்கள்　ஆ) மாற்றப்பட்ட செல்கள்
இ) மறுகூட்டிணைவுச் செல்கள்　ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

6) ஒரு செல்லில் ஒருமடிய குரோமோசோமின் எண்ணிக்கை 18 எனில் இரட்டை மானோசோமி மற்றும் ட்ரைசோமி நிலையில் குரோமோசோம்களின் எண்ணிக்கை
அ) 35 மற்றும் 37　ஆ) 34 மற்றும் 35　இ) 37 மற்றும் 35　ஈ) 17 மற்றும் 19

7) நிறக்குருடை நீக்க உதவும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்
அ) சோயா பீன்ஸ்　ஆ) தக்காளி　இ) மக்காச்சோளம்　ஈ) பொன்னிற அரிசி

8) மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் தானியம் டிரிடிக்கேல் என்பது
அ) எண்மடியம்　ஆ) அறுமடியம்　இ) அ மற்றும் ஆ இரண்டும்　ஈ) இருமடியம்

### பகுதி - ஆ

II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:-　　　　4×2=8

9) அபோமிக்ஸிஸ் என்றால் என்ன?
10) தாவரங்களால் சீரமைக்கப்படுதல் என்றால் என்ன?
11) ஆக்கிரமிப்பு செய்துள்ள அயல்நாட்டு தாவரங்கள் என்றால் என்ன?
12) உணவுச் சங்கிலி என்றால் என்ன?
13) டாப்ஸன் அலகு என்றால் என்ன?
14) சோற்றுக்கற்றாழையின் ஒப்பனை பயன்பாட்டை எழுது?

### பகுதி - இ

III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. வினா எண். 19க்கு கண்டிப்பாக விடையளி:　　　　3×3=9

15) பிணைப்பு - குறுக்கேற்றம் வேறுபாடு தருக?
16) தடைகட்டு நொதி என்றால் என்ன? அதன் வகைகளை எழுது.
17) தாவரங்களில் ரைட்டிடோம் அமைப்பு எவ்வாறு தீக்கு எதிரான பாதுகாப்பு அமைப்பாகச் செயல்படுகிறது என்பதைக் குறிப்பிடுக.
18) பயிர் பெருக்கத்தின் குறிக்கோள்கள் யாவை?
19) தன் மகரந்தச் சேர்க்கையைத் தடுக்க இருபால் மலர்கள் மேற்கொள்ளும் ஏதேனும் இரண்டு உத்திகளை பட்டியலிடுக?

### பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-　　　　2×5=10

20) உயர் தாவரங்களில் தழைவழி இனப்பெருக்கத்திற்கு கையாளப்படும் பாரம்பரிய முறைகளை விவரி?
*(அல்லது)*
தாவர திசு வளர்ப்பின் பயன்களை எழுதுக?

21) மீண்டும் காடுகள் உருவாக்குவதால் ஏற்படும் விளைவுகள் யாவை மற்றும் வேளாண் காடு வளர்ப்பில் நன்மைகள் யாவை?
*(அல்லது)*
புலனுணர்வு மாற்ற மருந்துகள் என்றால் என்ன? அபின் மற்றும் கஞ்சாச்செடி பற்றிய குறிப்பு வரைக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**XII உயிரியல்**

**உயிரியல் - விலங்கியல்**

மதிப்பெண்கள்:- 35

பகுதி - I

குறிப்பு:- i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. **1×8=8**

1) கைபேசிகளின் மூலம் உருவாகும் மின்னணுக் கழிவுகளில் எந்த உலோகம் அதிகமாகக் காணப்படுகிறது?
அ) தாமிரம் ஆ) வெள்ளி இ) பலேடியம் ஈ) தங்கம்

2) பாலூட்டியின் முட்டை ______
அ) மீசோலெசித்தல், ஓடற்றது ஆ) மைக்ரோலெசித்தல், ஓடற்றது
இ) ஏலெசிதல், ஓடற்றது ஈ) ஏலெசிதல், ஓடுடையது

3) ஒரு நிறக்குருடு ஆண் இயல்பான பெண்ணை திருமணம் செய்கின்ற போது பிறக்கும் குழந்தைகள் எவ்வாறு இருக்கும்
அ) மகள்கள் அனைவரும் கடத்திகளாகவும் மற்றும் மகன்கள் இயல்பாகவும் இருப்பார்கள்.
ஆ) 50% மகள்கள் கடத்திகளாகவும் மற்றும் 50% இயல்பான பெண்களாக இருப்பார்கள்.
இ) 50% நிறக்குருடு ஆண்களாகவும் மற்றும் 50% இயல்பான ஆண்களாக இருப்பார்கள்
ஈ) அனைத்து சந்ததிகளும் கடத்திகளாக இருப்பார்கள்

4) பின்வருவனவற்றில் எது சூழல் உள்பாதுகாப்பு வகையை சார்ந்தது அல்ல
அ) புகலிடங்கள் ஆ) தேசிய பூங்காக்கள்
இ) விலங்கியல் பூஙகாக்கள் ஈ) உயிர்கோள காப்பிடம்

5) புரதச்சேர்க்கை நிகழ்ச்சி மைய செயல்திட்டத்தின் சரியான வரிசையைக் கண்டறிக
அ) படியெடுத்தல், மொழிபெயர்த்தல், இரட்டிப்பாதல்
ஆ) படியெடுத்தல், இரட்டிப்பாதல், மொழிபெயர்த்தல்
இ) நகலாக்கம், மொழிபெயர்த்தல், படியெடுத்தல்
ஈ) இரட்டிப்பாதல், படியெடுத்தல், மொழிபெயர்த்தல்

6) வெப்பநிலையில் ஏற்படும் மாறுபாடுகளைத் தாங்கி வாழும் விலங்கு ______ என அழைக்கப்படும்
அ) உயிர்த்தொகை ஆ) மிகைவெப்ப வேறுபாட்டு உயிரிகள்
இ) எண்டோதெர்ம்கள் ஈ) ஸ்டீனோதெர்ம்கள்

7) மருந்துகளின் ராணி என்று அழைக்கப்படும் ______ மருந்து இரண்டாம் உலகப்போரில் காயமடைந்த வீரர்களுக்கு பயன்படுத்தப்பட்டது
அ) டெட்ராசைக்கிளின் ஆ) பெனிசிலின் இ) எரித்ரோமைசின் ஈ) நியோமைசின்

8) ______ மணி நேரத்திற்கு பிறகு கள், அருந்தக்கூடிய தன்மையை இழக்கிறது
அ) 92 ஆ) 48 இ) 24 ஈ) 72

பகுதி - ஆ

**II.** ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். **4×2=8**

9) புனித தோப்புகள் என்றால் என்ன?
10) Rh காரணியின் மரபுவழிக் கட்டுப்பாடு குறித்து வெய்னரின் கருதுகோள் பற்றி எழுதுக.
11) சிவப்பு ஒயின் மற்றும் வெள்ளை ஒயின் - வேறுபடுத்துக
12) இருவேறு சிற்றின விலங்குகளுக்கிடையேயான சார்புகள் ஏதேனும் இரண்டினை அட்டவணைப்படுத்துக.
13) நகலாக்கத்தின் சாதக பாதகங்களை குறிப்பிடுக.
14) விந்தகத்திரவத்தில் அடங்கியுள்ள பொருட்கள் யாவை?

பகுதி - இ

**III.** ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. வினா எண். 19க்கு கண்டிப்பாக விடையளி. **3×3=9**

15) சூழல் சுகாதாரக் கழிவறைகள் பற்றி சுருக்கமாக எழுதுக.
16) அமில மழை என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை?
17) ராவோல்ஃபியா வாமிடோரியா எனும் மருந்துக தாவரத்தில் உள்ள செயல்படு வேதிப்பொருளின் பெயர் என்ன? இது எந்த வகை பல்வகைத்தன்மையை சார்ந்துள்ளது?
18) ஸ்பாஞ்சுகளின் ஜெம்யூல் - பாகங்களுடன் படம் வரைக.
19) ஆப்பிரிக்க தூக்க வியாதியை ஏற்படுத்தும் புரோட்டோசோவாவின் அறிவியல் பெயரை எழுதுக. நோய் பரவும் விதம் மற்றும் அறிகுறிகளை எழுதுக.

பகுதி - ஈ

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- **2×5=10**

20) அ) பால்வினைத் தொற்றுகள் (STI) என்றால் என்ன? பாக்டீரிய பால்வினைத் தொற்று பற்றி எழுதுக.
**(அல்லது)**
ஆ) கடத்து ஆர்.என்.ஏ. (tRNA) அமைப்பினை பாகங்களுடன் படம் வரைந்து விளக்குக.

21) அ) உயிரினத் தோற்றம் குறித்த சோதனை அணுகுமுறையை யுரே மற்றும் மில்லர் ஆகியோரின் சோதனையை படத்துடன் விவரி?
**(அல்லது)**
ஆ) இயல்பான செல்கள் மற்றும் புற்றுநோய் செல்கள் வேறுபடுத்துக.

******